# <u>அரசுத் தேர்வுகள் இயக்ககம், சென்னை–600 006</u>

## <u>பத்தாம் வகுப்பு சிறப்பு துணைப் பொதுத்தேர்வு, ஜூன் / ஜூலை 2018</u>
## <u>சிறப்பு அனுமதி திட்டத்தின் கீழ் (தட்கல்) தனித் தேர்வர்கள் விண்ணப்பித்தல்</u>

## <u>செய்திக் குறிப்பு</u>

நடைபெறவுள்ள ஜூன்/ஜூலை 2018 பத்தாம் வகுப்பு சிறப்பு துணைப் பொதுத்தேர்வெழுத இவ்வலுவலகத்தால் நிர்ணயிக்கப்பட்ட கடைசி தேதிக்குள் விண்ணப்பிக்க தவறி, தற்போது விண்ணப்பிக்க விரும்பும் தனித்தேர்வர்களிடமிருந்து சிறப்பு அனுமதி திட்டத்தின் கீழ் (தட்கல்) விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

**<u>விண்ணப்பிக்க தகுதியானவர்கள் :</u>**

1. மார்ச்/ஏப்ரல் 2018, பத்தாம் வகுப்பு பொதுத்தேர்வினை பள்ளி மாணாக்கராகவோ அல்லது தனித்தேர்வர்களாகவோ தேர்வெழுதியிருக்க வேண்டும்.
2. மார்ச்/ஏப்ரல் 2018, பத்தாம் வகுப்பு பொதுத்தேர்வில் தேர்ச்சி பெறாத / வருகைபுரியாத அனைத்துப் பாடங்களையும் உடனடித் தேர்வில் தேர்வெழுத விண்ணப்பிக்கலாம்.

**<u>விண்ணப்பிக்க வேண்டிய நாட்கள் :</u>**

“சிறப்பு அனுமதி திட்டத்தின்”கீழ் தேர்வெழுத விரும்பும் தனித்தேர்வர்கள் தங்களது மாவட்டத்திற்குரிய முதன்மைக் கல்வி அலுவலர் அலுவலகத்தில் **11.06.2018 (திங்கட் கிழமை ) மற்றும் 12.06.2018 (செவ்வாய்க் கிழமை)** ஆகிய 2 நாட்களில் தங்களின் விவரங்களை பதிவு செய்து கொள்ள, மார்ச் / ஏப்ரல் 2018, பத்தாம் வகுப்பு தேர்வெழுதியவர்கள் தமது தற்காலிக மதிப்பெண் சான்றிதழின் நகலினையும், தேர்வெழுதாதவர்கள் (Absentees) தமது தேர்வுக்கூட நுழைவுச்சீட்டையும் விண்ணப்பத்தினை பதிவு செய்யும் அலுவலரிடம் கண்டிப்பாக காண்பிக்க வேண்டும்.

**<u>தேர்வுக் கட்டண விவரம் :</u>**

| | | |
|---|---|---|
| 1. | தேர்வுக் கட்டணம் | ரூ.125/– |
| 2. | சிறப்பு அனுமதிக் கட்டணம் | ரூ.500/– |
| | **மொத்தம்** | **ரூ.625/–** |

மேற்காண் கட்டணத்தை விண்ணப்பம் பதிவு செய்யும் முதன்மைக் கல்வி அலுவலர் அலுவலகத்தில் பணமாக செலுத்த வேண்டும்.

**தட்கல் திட்டத்தில் அனுமதிக்கப்படும் தேர்வர்களுக்கு திருநெல்வேலி, மதுரை, கோயம்புத்தூர், திருச்சி, கடலூர், வேலூர் மற்றும் சென்னை ஆகிய இடங்களில் மட்டுமே தேர்வு மையம் அமைக்கப்படும்.**

தேர்வுக்கூட அனுமதிச் சீட்டுகளைப் பதிவிறக்கம் செய்ய வேண்டிய நாட்கள் குறித்து பின்னர் அறிவிக்கப்படும்.

**ஒம்/–**
**இயக்குநர்**

**நாள் :** **05.06.2018.**

**இடம் :** சென்னை – 6